## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



...என்னையல்லாமல்

உங்களால்

ஒன்றும்

செய்யக்கூடாது.

யோவான் -(15:5)

## செய்தி மலர்
## 2016
## ஜூலை

இதழ் : 13
மலர் : 02



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! கர்த்தருக்குள் எல்லோரும் நலமாய் இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன் என்னுடைய அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஆறு மாதங்கள் நம்மோடிருந்து வழி நடத்திய தேவன் இந்த ஏழாவது மாதத்திலும் நடத்துவார் என்பதில் சந்தேகமில்லை

இஸ்ரவேலின் முதல் அரசன் சவுல் சொன்னது. "நான் இஸ்ரவேலின் கோத்திரத்திலேயே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்து குடும்பங்களிலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா.? (1 சாமு 9:21)என்று எத்தனை மனத்தாழ்மையை சவுல் காண்பிக்கிறான் என்பதை மேல் சொன்ன வசனத்தின் மூலம் தெரிந்து கொள்கிறோம். நாமும் அவ்விதமாக மனத்தாழ்மையை காண்பிக்க வேண்டும் என பரிசுத்த ஆவியானவர் சுட்டி காண்பிக்கிறார், அதற்கான காரணங்களை இனிவரும் வசனங்களில் காணலாம்.

முதலாவது இயேசு சொன்னார் – " என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது." ( யோவான் 15:5)என்று கடவுளின் சித்தம் இல்லாமல் நம்வாழ்க்கையில் ஒரு சிறு காரியத்தை கூட நம்மால் நிறைவேற்ற முடியாது. நம்முடைய மனித மூளையை கொண்டு நம்முடைய திறமையை கொண்டு இந்த உலகத்தில் எதையுமே சாதிக்க முடியாது. அதனால் ஆண்டவருக்கு முன்பாக நம்மை தாழ்த்துவோம். ஆண்டவரே உமக்கு என்னை ஒப்பு கொடுக்கிறேன் நீர் என்னை நடத்தும் என அர்ப்பணிப்போமா? அடுத்தபடியாக கர்த்தர் சொல்லுகிறார்

"...பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே.(ஏசாயா 48:17)நம்முடைய பெலன் எவ்வளவு என்பதை நன்றாக அறிந்து வைத்திருக்கும் தேவன் நம்மை அப்படியே விட்டுவிடுவதில்லை, மாறாக பிரயோஜனமாயிருக்கிறதை நமக்கு போதித்து நல்ல ஆலோசனையை வழங்கி நம்மை உணர்த்துவிக்கிறார். அற்புதமாக அவர் நம்மை நடத்துகிறார் ஆலோசனை தருவதுமட்டுமல்ல அவைகளை நிறைவேற்ற பெலனையும் நமக்கு தருகிறார்.

"நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து,உனக்கு ஆலோசனை சொல்லுவேன். (சங்கீதம் 32:8).என வாக்குறைத்திருக்கிறார்.

பிரியமானவர்களே ஆண்டவரை பார்த்து சொல்லுவோம் ஆண்டவரே நான் நடக்க வேண்டிய வழியை எனக்கு காண்பியும் (சங் 143:8) என்று கர்த்தருக்கு முன்பாக தாழ்மை படுவோம். அப்பொழுது அவர் சத்தியத்தின் பாதையில் நம்மை நடத்துவார். காரணம் வேதம் கூறுகிறது "நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாம் ஆகும் (1 கொரி 3:6)" விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாகும் (ரோமர் 9:16)" தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங் கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங்கூடாது;(பிரசங்கி 3:14)" மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்(எரேமியா 10:23)என எரேமியா கூறுகிறார்.

அன்பானவர்களே, கடவுளுக்கு முன்பாக நம்மை தாழ்த்துவோம், நாம் ஒன்றுமே இல்லை என்பதை ஒப்புக்கொள்வோம், ஆண்டவருடைய சித்தத்திற்கும், ஆலோசனைக்கும், வழிநடத்துதலுக்கும், நம்மை அற்பணிப்போம். ஆப்பொழுது கர்த்தர் தாமே அதிகமாக ஆசீர்வதித்து வழிநடத்துவார்.

கர்த்தருடைய கிருபை இந்த ஜுலை மாதம் முழுவதும் நம்மோடிருந்து நம்மை வழிநடத்துவதாக

கர்த்தர் கிருபை நம்மோடிருப்பதாக!.

அவருக்கே மகிமை உண்டாவதாக !

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

**S. ஸ்டாலின்**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் மணிராஜ் அவர்களிடத்திலும், இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. சாம்ஆனந்த் அவர்களிடத்திலும், போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ.ஜான்ஸன் ஸ்டீஃபன் அவர்களிடத்திலும், தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி அன்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)

# தேவ செய்தி

## இப்படியா ஜெபிக்கணும்!

நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன்.

-லேவி. 26:4

ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் என் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாத செய்திமலர் மூலமாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவரோடு நாம் தொடர்பு உள்ளவர்களாக இருப்பதற்கு "ஜெபம் ஜெபம் ஜெபம் ஜெபம் ஜெபம்" நமக்கு இன்றியமையாதது. யோவான் 16:23-ல் "அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங்கேட்க மாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்" என்று இரட்சகர் இயேசு தம்முடைய மரணத்திற்கு முன் சீஷர்களுக்கு சொன்னதிலிருந்து நாம் எதை ஜெபத்தில் கேட்டாலும் அதை இயேசுவின் நாமத்தில் கேட்க வேண்டும் என்று விளங்குகிறது. அநேகர் இன்று தங்கள் ஜெபத்தை ஆரம்பிக்கும் போது மிகவும் அன்புள்ள இயேசு சுவாமி என்று கூறி தங்கள் விண்ணப்பங்களைத் தெரிவிக்கிறார்கள். இன்னும் பலர் ஜெபத்தின் ஆரம்பத்தில் பிதாவைக் கேட்டு முடிக்கும் போது இயேசுவின் நாமத்தில் ஆமென் என அரைகுறையாய் முடிக்கின்றனர். இப்படிப்பட்ட ஜெபத்தின் ஆரம்பத்திற்கும் முடிவிற்கும் சம்பந்தம் கிடையாது. இன்னும் சிலர் தேவனின் திரியேக தன்மையை மறுதலிக்கிறவர் போல இயேசுவினிடத்திலேயே விண்ணப்பத்தைக் கேட்டு, முடிக்கையில் இயேசுவின் நாமத்தில் என்று சொல்லாமல் மொட்டையாக வேண்டிக் கொள்கிறோம் என்று சொல்லுகின்றனர். இவ்வாறு ஜெபங்கள் உருமாறுகின்றன. பொதுவான ஜெபங்களை இயற்றியுள்ளவர்கள் அதில் இயேசுவோ பிதாவோ இல்லாமல் சில இடங்களில் கடவுள் என்ற வார்த்தையை பயன்படுத்தி எழுதியுள்ளனர். இயேசு மிகத் தெளிவாக சொல்கிறார் பிதாவினிடத்தில் என் நாமத்தினாலே கேளுங்கள் என்று. இது ஒரு கட்டளை. இந்த கட்டளையை இயேசு பாடுபடுவதற்கு முன்பு சீஷர்களிடத்தில் சொல்கிறார். நீங்கள் இது வரை என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை என்கிறார் (யோவா. 16:24).

கர்த்தர் நம்மோடே இருக்கிறார் அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை -எண். 14:9

இயேசு உலகத்தில் இருந்த நாட்களில் சிலர் தங்கள் தேவைகளை இயேசுவினிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொண்டனர். மேலும் சீஷர்கள் எங்களுக்கு ஜெபிக்க கற்றுக் கொடுங்கள் என்று கேட்ட போது இயேசு பரமண்டலங்களில்

இருக்கிற எங்கள் பிதாவே (மத். 6:9-13 -ஐ வாசிக்கவும்) என்று ஆரம்பிக்கிற ஜெபத்தை அவர்களுக்கு கற்றுத் தருகிறார். ஆனால் அதில் இயேசுவின் நாமத்தில் என்று முடிக்கிற முடிவு இல்லை ஏனென்றால் இயேசு உலகத்தில் இருந்த நாட்களில் அந்த ஜெபத்தைக் கற்றுத் தந்தார் ( இயேசுவின் நாமம் இன்னும் மகிமைப்படவில்லை ). மீண்டும் யோவான் 16:23 -ல் இயேசு உலகத்தை விட்டு எடுக்கப்படும் போது அவர் சொல்கிறார் அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றும் கேட்க மாட்டீர்கள் என்று. அந்த நாள் என்பது இயேசு உலகத்தை விட்டு எடுக்கப்பட்ட பின்பு என்பதைக் குறிக்கிறது. எனவே அன்பானவர்கள்! இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற இந்த நாட்களில் இயேசுவினிடத்தில் அல்ல இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் நாம் கேட்பதை எல்லாம் பெற்றுக் கொள்வோம் (யோவா. 14:14-15). இயேசுவின் மூலமாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதே தேவனின் சித்தம். பிதாவினிடத்தில் நாம் எளிதாக கிட்டிச்சேர நமக்கு தேவன் கொடுத்திருக்கும் வல்லமையுள்ள நாமம் தான் இயேசுவின் நாமம். "என்னாலேயல்லாமல் (இயேசு) ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா. 14:6). ஆகவே யோவான் 16:26 -ல் அந்த நாளில் (இயேசு உயிர்த்தெழுந்த பிறகு) நீங்கள் என் நாமத்தில் வேண்டிக் கொள்வீர்கள் உங்களுக்காக பிதாவை நான் கேட்டுக் கொள்வேன் என்று இயேசு சொல்வதினால் நாம் அவர் நாமத்தில் கேட்கும் போது அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். இந்த சத்தியத்தை மக்கள் அறியாததினால் சிலர் இயேசு மட்டும் என்றும், சிலர் யகோவா மட்டும் என்றும், வேறு சிலர் பரிசுத்த ஆவி இல்லை என்றும் குழம்பி மக்களையும் குழப்புகின்றனர். நாமோ இன்றிலிருந்து ஜெபத்தில் பிதாவினிடத்தில் எதைக் கேட்டாலும் இயேசுவின் நாமத்தில் கேட்போம் தேவைகளை ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வோம். ஆமென்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

**நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்**

யோவான் 15:16

## 2016 ஆம் வருடத்தின் சபையின் வாக்குத்தத்தம்

**என் நாமத்தினாலே நீங்கள் எதை கேட்டாலும் அதை நான் செய்வேன்** ( யோவான் 14:14)

# சகோதரிகள் பகுதி

## தேவ பயம்

கிறிஸ்துவத்தின் தொடக்கமும்,அடிப்படையுமான காரியமாகும். வேதாகமம் அடிக்கடி இதை நினைவூட்டிக்கொண்டே இருக்கிறது. தேவ பயம் என்பது தேவனுக்கும் விசுவாசிக்கும் இடையேயான உறவின் பல கோணங்கள் உள்ளடங்கியதாகும்.

தேவபயம் தேவனது தூய்மையையும் நீதியையும், மகத்துவத்தையும், அங்கீகரிக்கிறது. பயபக்திக்குறியவராக அவரை கண்டுகொள்கிறது பாவத்தை குறித்து மிகவும் எரிச்சலுள்ள அவருக்கு முன் தனது குறைகளை கண்டு நடுங்குகிறது. தூய்மையான நீதியுள்ள அவரது நியாயதீர்ப்புக்கு பயப்படுகிற, அனைத்தையும் செய்ய ஆற்றலுள்ள அவரது திட்டங்கள் அவ்வாறே நிகழும் என்பதை உணருகிறது.

தேவனின் மகத்துவ பண்பை காணும் போது அதன் மறுபக்கத்தில் இருக்கும் தேவ அன்பையும் நாம் காண்கிறோம். பயப்படுதலுக்குறிய அவர் அன்பின் சொரூபியாகவும் இருப்பது நமக்கு ஆறுதலை அளிக்கிறது. அவர் அளவற்ற நிலையில் நம் மேல் அன்பு கூர்ந்ததை கல்வாரி சிலுவை காட்டுகிறது.

எனவே கிறிஸ்துவ பயபக்தி அன்பினால் நிறைந்த பயபக்தியாக மாறுகிறது. இது சாத்தானின் பயந்து நடுங்குதலுக்கு (யாக் 2:19) மிகவும் வேறுபட்டதாகும்.

தேவ பக்தியை பற்றி நீதிமொழிகள் தரும் செய்தி

அது ஞானத்தின் ஆரம்பம் (நீதி 1:7)

அது திமையை விட்டு விலகுகிறது(நீதி 3:7/16:6)

தீமையை வெறுக்கச்செய்கிறது(நீதி 8:13)

அது ஆயுசு நாட்களை பெறுக பண்ணுகிறது(நீதி 10:27)

அது திட நம்பிக்கை தருகிறது (நீதி 14:26)

அது ஜீவ ஊற்று (நீதி 14:27)

அது ஞானத்தை போதிக்கும் (நீதி 15:33)

அது ஜீவனுக்கு ஏதுவானது(நீதி 19:23)

அது ஐசுவரியமும்,மகிமை,ஜீவன் ஆகியன தரும் (நீதி 22:4)

அது கர்த்தரை பற்ற உதவுகிறது (நீதி 23:17)

தேவ பயம் மற்றவர் கிறிஸ்துவுக்குறியவராக விளங்கமுடியாது. கிறிஸ்துவ விசுவாசம் அந்த சேரக்கூடாத ஒளிக்கு நேராக வழிநடத்திச் செல்லும்போது தேவ பயம் பெருகும்

ஆனால் தேவ பயமற்ற கிறிஸ்தவர்களும், போதகர்களும் பிசாசினால் கண் குருடாக்கப்பட்டவரே. தெய்வீக ஒளியின் ஒரு பொறியை கண்டு உணர்ந்திருப்பாரேயாயின் நிச்சயம் அவர்கள் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டார்கள்.

கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரி

**கிரேஸ் ரவிச்சந்திரன்**

# மாற்றம் சாத்தியமே!

அநேகர் அறிந்த நாத்திகரான இங்கர்சால் ஒரு சமயம் இரயிலில் சென்றுக் கொண்டிருந்தபோது லீயூ வாலீஸ் என்ற வழக்கறிஞரை சந்திக்க நேர்ந்தது. இருவரும் கிறிஸ்தவத்திற்கு எதிராக பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது இங்கர்சால் லீயூவாலிஸிடம் "இயேசு கிறிஸ்து தேவன் அல்ல சாதாரண மனிதனே" என நிரூபிக்கும்படி தாங்கள் ஒரு புத்தகம் எழுத வேண்டும் என அவரைக் கேட்டுக்கொண்டார்.

அப்படியே அவரும் வேதத்தை வாசித்து ஆராய்ச்சி செய்து இயேசு தேவனல்ல என்று கிறிஸ்தவத்திற்கு எதிராக ஒரு புத்தகம் எழுத ஆரம்பித்தார். தனது புத்தகத்தில் நான்கு அத்தியாயங்கள் எழுதி முடித்த நிலையில் லீயுவாலஸ் வேத வார்த்தைகளால் தொடப்பட்டார். புத்தகத்தை எழுதிக்கொண்டிருக்கும் போதே இயேசு தேவகுமாரன் என உணர்த்தப்பட்டார். தன் மேஜை அருகிலேயே முழங்கால் படியிட்டு தன் பாவங்களையெல்லாம் தேவனிடம் அறிக்கையிட்டார். 50

வயதான தன் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார். தன் எழுதிய நான்கு அத்தியாயங் - களையும் திருத்தி எழுதினார். "இயேசு கிறிஸ்து தேவனல்ல அவர் சாதாரண மனிதனே" என்று எழுத தீர்மானித்தவர் "இயேசு கிறிஸ்துவே தேவன்" என எழுதி முடித்தார். அவர் எழுதிய புத்தகம்தான் லட்சக்கணக்கான மக்களால் உலகமெங்கும் விரும்பி வாசிக்கப்பட்டதும் திரைப்படமாய் ஓடினதுமான பென்ஹர் என்ற புத்தகம். பரிசுத்த வேதாகமத்தை திறந்த மனதோடும் தெளிந்த புத்தியோடும் வாசியுங்கள் அது நிச்சயம் நம்மையும் மாற்றக்கூடியதே!

" கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது,

கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. சங்கீ-17:7

கிறிஸ்துவின் பணியில்

S. ஆல்பர்ட்

# அப். பேதுருவின் இரத்த சாட்சி

இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் முரணான குணத்தையுடையவர் சீமோன் பேதுரு. இவர் கலிலேயாவில் உள்ள பெத்சாயிதாவில் பிறந்தார். யூதாஸ்காரியோத்தை தவிர மற்ற அனைத்து சீடர்களும் பெத்சாயிதாவை சேர்ந்தவர்கள். பெத்சாயிதா என்பதற்கு மீன்களின் வீடு என்று பொருள். சீமோனின் தகப்பன் பெயர் யோனா. யோனா என்பதற்கு புறா என்று பொருள். சீமோன் என்பது யூதப் பெயர். சீமோனை அவனுடைய உடன் பிறந்த தம்பி அப். அந்திரேயாதான் இயேசுவுக்கு அறிமுகம் செய்தார். இயேசு சீமோனைக் கண்டு யோனாவின் மகனாகிய சீமோனே நீ கேபா எனப்படுவாய் என்றார். கேபா என்பது அரமேயம் அல்லது சீரியாக் மொழியாகும். கேபா என்றால் பாறை என பொருள்படும். கேபா என்பதற்கு கிரேக்க மொழியில் பீட்டர் என்றும் தமிழில் பேதுரு என்றும் அழைக்கப்படுகிறது.

சீமோன் பேதுரு வலிமை வாய்ந்த உடற்கட்டு உடையவர். இவர் ஒரு பலவீனமான பண்பை உடையவராக இருந்தாலும் நான்கு நற்செய்தி நூல்களுமே இவரை அவசர புத்தியுள்ளவன், உணர்ச்சிவசப்படக் கூடியவன், தீவிரமானவன், மிகுந்த ஆர்வமுள்ளவன், அளவு கடந்த ஊக்கமுடையவன், பதிலளிக்க முந்திக் கொள்பவன், பன்னிருவரின் சார்பாக கேள்வி கேட்பவன் என்று வர்ணிக்கிறது. ஒரு நாள் இரவு முழுவதும் முயன்றும் ஒரு மீனும் அகப்படாததால் துக்கத்தோடே பேதுரு வலைகளை கழுவிக் கொண்டிருந்தார். அப்பொழுது கர்த்தராகிய இயேசு பிரசங்கித்து விட்டு ஆழத்திலே தள்ளிக் கொண்டுபோய் மீன் பிடிக்கும்படி வலையை போடுங்கள் என்றார், இயேசு ஒரு தச்சு தொழிலாளி. பேதுரு அதை யோசிக்காமல் ஐயரே! இராமுழுவதும் நாங்கள் பிரயாசபட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையை போடுகிறேன் என்றான்.

இயேசுவின் வார்த்தையின்படி வலையை போட்டதால் வலை கிழிந்து போகத்தக்கதாக திரளான மீன்களைப் பிடித்தான். மேலும் இயேசு பேதுருவைப் பார்த்து பயப்படாதே இது முதல் நீ மனிதரை பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். பேதுருவின் வீடு கப்பர்நகூமில் இருந்தபடியால் இயேசு கப்பர்நகூம் வரும் போதெல்லாம் பேதுருவின் வீட்டில்தான் தங்கினார். ஒருமுறை பேதுருவின் மாமி உடல் நலமில்லாமல் இருந்தபோது இயேசு குணமாக்கினார். அந்த வீடு புனித சின்னமாக விளங்குகிறது. ஒருமுறை எருசலேமில் தமக்கு மரணம் நேரிடப்போவதை இயேசு தம் சீஷர் களுக்கு அறிவித்தார்.

பேதுரு இயேசுவை அதிகமாக உணர்ச்சி ததும்பும் இருதயத்தோடும் முழு அன்போடும் நேசித்ததினால், இயேசு தன்னுடைய மரணத்தைப் பற்றி பேசியதை பேதுருவால் தாங்கிக் கொள்ள முடியாமல் இது உமக்கு நேரிடக்கூடாது என்று கடினமாக சொன்னார். ஆனால் இயேசு அவனை கடிந்து கொண்டாலும் தனது தவறுகளையும் குறை களையும் உணர்ந்து ஒப்புக் கொள்ளும் தாழ்மை பேதுருவிடம் இருந்தது. அதனாலே பேதுரு மேன்மை பெற்றார். மூன்று முறை பயந்துபோய் இயேசுவை மறுதலித்த பேதுரு பெந்தெகொஸ்தெ நாளின்போது பரிசுத்த ஆவியை பெற்றவுடனே முழவதம் மாற்றப்பட்டார். அதுவரை பயந்து ஒளிந்திருந்த சீமோன்

## 2016 – ஜுன் மாத வேத வினாக்களுக்கு விடைகள்

1. மோசே – அப்போஸ்தலர் 7: 20
2. கொர்நேலியு – அப்போஸ்தலர் 7: 20
3. 120 சீஷர்கள் – அப்போஸ்தலர் 1: 12-15
4. அப்போஸ்தலர் 7: 20
5. அப்பொல்லோ – அப்போஸ்தலர் 18: 24
6. மூப்பர்களை – அப்போஸ்தலர் 14: 23
7. ஸ்தேவான் – அப்போஸ்தலர் 6: 15
8. பிலிப்பு – அப்போஸ்தலர் 8: 40
9. பவுல் – பர்னபா – அப்போஸ்தலர் 15: 35
10. தீமோத்தேயு – அப்போஸ்தலர்

16 : 1 11. லீதியாள் – அப்போஸ்தலர் 16: 14

12. அனனியா – அப்போஸ்தலர் 23 : 2
13. கிறிஸ்பு – அப்போஸ்தலர் 18 : 8
14. சொஸ்தனே – அப்போஸ்தலர் 18 : 17
15. சவுல் (பவுல்) – அப்போஸ்தலர் 22: 19-20

## 2016 ஜுன் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Selvi . ஜெஸ்வினி இயேசுதாஸ்
Sis. ஆனந்தி
Sis. சுகந்தி தம்புகுமார்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. சாந்தி
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்கீஸ்

Bro. ஜாண்
Bro. ஜாண்ஸன்
Bro. ஜெபராஜ்
Bro. கிறிஸ்டோபர். M

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ...... " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. அஃபியா ஆரோக்கியதாஸ்
செல்வி. ஜியோனா செல்வசிங்
செல்வி. ஷேரன் செல்வராஜ்
செல்வி. ஜோஸ்பின் அந்தோனிசாமி
செல்வி. ஹர்ஸிதா வெங்கடேஷ்
செல்வி. லீனா வில்கின்ஸ்

செல்வன். ஜோசப் பிரின்ஸ்ஜெகநாதன்
செல்வன். ஏனோக் மார்க் ஆன்டனி
செல்வன். டெலின் ஜெர்வின் ஃபிராங்கிளின்
செல்வன். ஆல்வின் தம்புகமார்
செல்வன். சஃப்ரின் திமோத்தி சிவகுமார்
செல்வன். சதீஸ் ஜெயச்சந்திரன்
செல்வன். மோனித்ராஜ் வெங்கடேஷ்
செல்வன். சைமன் ஜெயக்குமார்

சகோதரி. ரெஜினா ராமமூர்த்தி
சகோதரி. பெல்வியா ஜெரின்
சகோதரி. மேகலா ஆஸ்டின்
சகோதரி. ஏஞ்சலீனா மணிராஜ்

சகோதரி. ராதா இவாஞ்சலின்
சகோதரி. பவானி ஆரோக்கியராஜ்
சகோதரி. விக்டோரியா ஜோசப் ஜாண்
சகோதரி. ஜெபராணி தர்மர்
சகோதரி. கிறிஸ்டி டேனியேல்
சகோதரி. சாந்தி ஜெயசேகர்
சகோதரி. ஹெப்சிபா சேம் ஆனந்த்
சகோதரி. பாக்கிய சுந்தரி செல்வம்


சகோ. ஸ்ரீதர் சகோ. ஜோசப் ஜாண்
சகோ. சத்தியநாதன்
சகோ. தாமஸ்
சகோ. தாஸ்செல்வம்
சகோ. சதீஸ்குமார் எத்திராஜ்
சகோ. தாஸ்
சகோ. ஸ்டாலின்
சகோ. கபிலன் பால் புருஷோத்தமன்
சகோ. அசோக்குமார்
சகோ. ஸ்டீபன் ஜெயக்குமார்



## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



திருமதி / திரு. சாமுவேல் ஜாண்சன்
திருமதி / திரு. ஜோன்ஸ் செல்வசிங்
திருமதி / திரு. அசோக்குமார்
திருமதி / திரு. முத்தையா
திருமதி / திரு. சதீஷ்குமார்
திருமதி / திரு. ஜெஸ்டின்
திருமதி / திரு. வர்க்கீஸ்
திருமதி / திரு. தாஸ் செல்வம்
திருமதி / திரு. /பிரட்ரிக் செல்வராஜ்



# 2016 ஜுலை மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/07/2016 | சகோ. ஜெயசேகர் | சகோ. எபிநேசர் |
| 10/07/2016 | சகோ.ஆரோக்கிதாஸ் | சுகோ.தாமஸ் |
| 17/07/2016 | சகோ.ஆரோக்கிய ராஜ் | சுகோ.சுகுமார் |
| 24/07/2016 | சகோ.அற்புத ராஜ் | சகோ. ரவிஜான் பீட்டர் |
| 31/07/2016 | சகோ. வில்ஸன் | சகோ. சாமுவேல் தாசையா |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/07/2016 | சகோ. ரவிச்சந்திரன் | சகோ. ஸ்டாலின் |
| 08/07/2016 | சகோ. ஜெயசேகர் | சகோ. ஜசக் துரை |
| 15/07/2016 | சகோ. டேவிட் | சகோ. பிரேம் குமார் |
| 22/07/2016 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 22/07/2016 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ. ரவிச்சந்திரன் |

*சகோதரிகள் ஐக்கிய கூடுகை* – நாள் ,நேரம், இடம், பின்னர் அறிவிக்கப்படும்

14/07/2016 அன்று
இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை
*முழு இரவு ஜெபம்* – இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் , அஹமதி

29/07/2016 அன்று *வாலிப ஐக்கிய கூடுகை* – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரைஇடம் –பாஹீலில் உள்ள சபியன் ஜெப வீடு (Prayer house)

# 2016 ஜுலை மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. எனக்குச் சுகமுமில்லை,இளைப்பாறுதலு மில்லை, என்றது யார்?
2. என் சுகவாழ்வு ஒரு மேகத்தைப்போல் கடந்து போயிற்று என்றது யார்?
3. மந்தையைக் காக்கும் நாய்களைபற்றி வாசிப்பதெங்கே?
4. சர்வவல்லவராகிய தேவன் நீதியைப் புரட்டுவாரோ? என்றவன் யார்?
5. காட்டுக் கழுதைக்குட்டிக்கு ஒப்பாகப் பிறந்திருந்திருக்கிறவன் யார்?
6. பாவஞ் செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியது என்ன? என்றது யார்?
7. என் ஆத்துமா என் ஜீவனை ஆரோசிக்கிறது என்றது யார்?
8. தாரசில் தன் சஞ்சலம் நிறுக்க விரும்பினவன் யார்?
9. தன் கண்களோடே உடன்படிக்கை பண்ணின பக்தன் யார்?
10. தேவனுடைய இரகசியச் செயல் யார் கூடாரத்தின் மேல் இருந்தது?
11. நான் பேசினாலும் நான் பேசாமலிருந்தாலும் என் துக்கம் ஆறாது என்றவன் யார்?
12. என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும்,என்று ஜெபித்தவன் யார்?
13. ஒளியும் இருளாகும் தேசமெது?
14. விதவைகளை வெறுமையாய் அனுப்பிவிட்டீர் என்று குறை கூறியது யார்?
15. பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசினவள் யார்?

விடைகளை வருகின்ற 20-07-2016 க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.விடைகளை யோபு புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்.அல்லது விடைகளை (Whatapps மூலமும் அனுப்பலாம் # 66015503)

## – – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –

மத்தேயு 7:7

பேதுரு பிறகு தேசாதிபதிகளோடு தைரியமாக பேசுகிறார். சிறைக்கு செல்கிறார்: அவரது முதல் பிரசங்கத்திலே மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். முதல் அற்புதமாக பிறவி சப்பாணியை குணமாக்கினார். பிறகு தபீத்தாள் என்ற மரித்து போன பெண்ணை உயிரோடு எழுப்பினார்.

கிறிஸ்தவ சமயம் யூதருக்கு மட்டுமல்ல புற ஜாதியாருக்கும் பொதுவானது என்று இவராலே அறிவிக்கப்பட்டது. இவர் பலமுறை சிறை வைக்கப்பட்டார்: சில வேளைகளில் தேவதூதரால் விடுதலையாக்கப்பட்டார். I, II பேதுரு நிருபங்களை சபைக்கு எழுதினார். இவருக்கு எழுத படிக்க தெரியாததால் இவர் சொல்லச சொல்ல மாற்கு எழுதினார். பேதுருவுக்கு மொழி பெயர்ப்பாளராக பணியாற்றிய மாற்கு இவர் கூறிய செய்திகளை மனதில் கொண்டுதான் மாற்கு சுவிசேஷதத்தை எழுதினார். அப். பேதுரு அந்தியோகியா பட்டணத்தில் ஏழு ஆண்டுகள் அந்திரேயா சபையின் பேராயராக பணிபுரிந்தார்.

இதன் பிறகு தனது இடத்தில் இயோடியஸ் என்ற ஊழியரை பேராயராக அபிஷேகம் செய்துவிட்டு பாபிலோனிலுள்ள சிதறடிக்கப்பட்ட யூதர்களிடையே ஊழியம் செய்ய சென்றார். பிறகு பிரிட்டனிலும் பிரான்சிலும் ஊழியம் செய்தார். பிரான்சில் உள்ள கால் பகுதியிலுள்ள சார்ட்ரஸ் சபையின் புனித பிதாவாக அப். பேதுரு போற்றப்படுகிறார். இங்கு மிக பழமையான பேராலயம் உள்ளது. பிரிட்டனிலும் யூதர்களும் ரோமர்களும் குடியிருந்தார்கள். அங்கு பேதுரு சென்று நற்செய்தி அறிவித்தார். உன் ஆகாரத்தை தண்ணீர்கள் மேல்போடு அநேக நாட்களுக்குப் பிறகு அதன் பலனைக் காண்பாய் என்ற வசனத்தின்படி கி.பி 156 –ல் கிறிஸ்தவம் பிரிட்டனில் தேசிய சமயம் என்று அரசு அங்கீகாரம் பெற்றது. அப். பேதுரு கி.பி 61 –ல் ரோமாபுரி சென்றார். உணவோ தண்ணீரோ வெளிச்சமோ இன்றி கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் ஒன்பது மாதங்கள் அவதியுற்றார். அங்கே அந்த வேதனை மத்தியிலும் சுவிசேஷத்தை பிரசங்கித்து புரோசெஸ்ஸஸ், மார்டினியானஸ் என்ற சிறைச்சாலை அதிகாரிகளையும் மேலும் 47 பேரையும் கிறிஸ்துவுக்குள் வழி நடததினார்.

இசசிறையிலிருநது பிறகு விடுதலையாக்கப்பட்டார். கி.பி 68 –ல் அகிரிப்பா அரசனுக்கும் அவனுடைய நான்கு மறுமனையாடடிகள் மற்றும் அநேகர் கூடியிருக்கும் போது மிகப் பெரிய நற்செய்தியை அறிவித்தார். இதில் அரசனின் நான்கு மறுமனையாட்டிகள் மற்றும் அகல்பீனசின் மனைவி செந்திப்பா உட்பட அநேகர் தங்கள் பழைய வாழ்க்கையை மாற்றிக் கொண்டு பரிசுத்த வாழ்க்கைக்கு திருப்பப்பட்டார்கள். இதனால் அகரிப்பாவும் அகல்பீனசும் பேதுருவின் மீது கடுங்கோபம் கொண்டு அவரது ஊழியத்தை கைவிடுமாறு பலமுறை எச்சரித்தனர். ஆனால் அப். பேதுரு ஊழியத்தை தொடர்ந்து செய்ததால் கொடியவர்கள் அவரை கொலை செய்யும்படி மூர்கக் வெறி கொணடு பேதுருவை துரத்தினார்கள் பேதுரு ரோம் நகரை விட்டு ஓடத்தொடங்கினார். அப். பேதுரு ரோம் நகரைவிட்டு வெளியே ஓடும்போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் எதிரே வருவதைக் கண்டார். அப். பேதுரு ஆணடவரை பார்த்து ஆண்டவரே நீர எங்கே போகிறீர என்று கேட்டார். இயேசு பேதுருவை பார்த்து நான் சிலுவையில் அறையப்படுவதற்கு ரோம் நகருக்குப்

போகிறேன் என்றார். அதற்கு பேதுரு ஆண்டவரை நோக்கி நீர் மீண்டும் சிலுவையில் அறையப்பட காரணம் என்ன என்றார். அதற்கு இயேசு நான் மீண்டும் சிலுவையில் அறையப்படுவதற்கே ரோம் நகருக்கு செல்கிறேன் என்றார்.

பேதுரு எந்த இடத்திலிருந்து ஓடி வந்தாரோ அந்த இடத்திற்கு தனக்கு பதிலாக சிலுவை சுமக்கவே இயேசு செல்கிறார் என்று பேதுரு விளங்கிக் கொண்டார். மீண்டும் அப். பேதுரு மரிப்பதற்குத் துணிந்து ரோம் நகருக்குத் திரும்பினார். கொடியவர்கள் முதலாவது பேதுருவை பிடித்து வைத்துக் கொண்டு பிறகு அவருடைய மனைவியையும் பிடித்துக் கொண்டு வந்தனர். முதலில் பேதுருவின் மனைவியை சிலுவையில் அறைந்தார்கள். தன் மனைவி சிலுவையில் அறையப்படும் போது துன்பப்படும் நிகழ்ச்சியை அப். பேதுரு காணும்படி கொடியவர்கள் பேதுருவை கட்டாயப்படுத்தினார்கள். அப். பேதுரு துன்பப்படும் தன் மனைவியை பார்த்து நம் ஆண்டவர் இயேசு நமக்காக சிலுவையில் தொங்கிய காட்சியை நினைத்துக் கொள் என்று தன் மனைவியை ஊக்கப்படுத்தினார். இந்த நிகழ்ச்சியைக் கண்ட அவர் பக்கத்தில் நின்ற சிறைச்சாலைக் காரன் அந்நேரமே கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ விசுவாசியானான். பிறகு அப். பேதுருவை சிலுவையில் அறையப்படும் நேரம் வந்தது. அப்போது. அப். பேதுரு அவர்களை பார்த்து என் ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்ததுபோல நான் மரிப்பதற்கு தகுதியற்றவன் தயவு செய்து என்னை தலை கீழாக சிலுவையில் அறையுங்கள் என்று கேட்டுக் கொண்டார். அவ்வண்ணமே அப். பரிசுதத் பேதுருவை தலை கீழாக சிலுவையில் அறைந்தார்கள் அப். பேதுரு அவருடைய துணிவினாலுமநேர்மையி னாலும் உயர்ந்த பண்பினாலும் மீட்பர் இயேசுவுக்கு நல் மனதோடு ஊழியம் செய்து டைபர் நதியின் கரையில் வாடிகன் மலை மீது தலை கீழாக சிலுவையில் அறையப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார். இவரது உடலை பதப்படுத்தி மார்செல்லினஸ் என்ற தேவ ஊழியர் வாடிகனில் அடக்கம் செய்தார். அந்த இடத்தில் சிறு ஆலயத்தையும் கட்டினார். ஆனால் ஹெலியோகலாசிஸ் என்பவர் இந்த ஆலயத்தை அழித்துவிட்டார். அப். பேதுருவின் உடல் ரோமாபுரிக்கு அருகில் இரண்டு மைல் தொலைவிலுள்ள அப்பியு பாதைக் கல்லறையில் வைக்கப்பட்டது. கி.பி. 325 –ல் மன்னர் கான்ஸ்டன்டைனால் வாடிகனில் பெரிய ஆலயம் கட்டப்பட்டபோது பரிசுத்த பேதுருவின் உடல் அங்கு வைக்கப்பட்டது. 16 –ம் நூற்றாண்டில் ஆலயம் திரும்ப கட்டப்பட்டு புனித பேதுரு ஆலயமாக மாற்றப்பட்டது. இப்போது வாடிகன் பகுதி முழுவதையும் போப்பாண்டவர் புனிதஸ்தலமாக மாற்றிவிட்டார். தற்பொழுது இந்த எலும்புகள் புனித பேதுரு வளாகத்திலுள்ள புதிய கல்லறையில் வைக்கப்பட்டுள்ளது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் என்ற வசனத்தின்படி சிறந்த இரதத் சாட்சியாக மரித்தார் அப்போஸ்தலனாகிய பரிசுத்த சீமோன் பேதுரு.

தொகுப்பு

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

கிறிஸ்டோபர் ராபர்ட்

# ஸ்டான்லி ஜோன்ஸ் (1884-1973)

இந்திய மக்களுக்கு அவர்களது கலாச்சாரம் பண்பாடு பழக்கவழக்க முறைகளை மாற்றாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவர்களை கிறிஸ்துவின் பிள்ளைகளாக்க முயற்சி எடுத்தவர் ஸ்டான்லி ஜோன்ஸ். கிறிஸ்தவத்துடன் ஒன்றறக் கலந்திருந்த மேற்கத்திய கலாச்சாரத்தைப் பிரித்து எடுத்து இந்திய மக்களுக்கு கிறிஸ்துவை மட்டும் கொடுத்தவர். அறிவியல் சம்பந்தமான விரிவுரைகளை வழங்கி சுவிசேஷம் சொல்ல அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தியவர் அவர். 1884-ம் ஆண்டு மேரி லேண்டு என்ற இடத்தில் பிறந்தார். தன்னுடைய கல்லூரி நாட்களிலேயே தன்னார்வ மாணவர்கள் என்ற இயக்கத்தில் இணைந்து, வெளிநாட்டிற்கு மிஷனெரியாகப் போக தீர்மானித்தார். ஆப்பிரிக்கா தேசத்தில் மிஷனெரியாகப் பணிபுரிந்த டேவிட் லிவிங்ஸ்டனைத் தேடிப்போன ஸ்டான்லி என்பவரின் வாழ்வு டேவிட் லிவிங்ஸ்டனின் சந்திப்பினால் மாற்றப்பட்டதை அறிந்த ஜோன்ஸ் தானும் ஆப்பிரிக்கா தேசத்திற்கு மிஷனெரியாக போக வாஞ்சைகொண்டார். ஆனால் ஜோன்ஸ் அங்கம் வகித்த மிஷனெரிச் சங்கம் இவரை இந்தியாவுக்கு மிஷனெரியாக அனுப்பத் தீர்மானித்தது. லக்னோவில் உள்ள ஆங்கிலம் பேசும் திருச்சபையினருக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட மெதடிஸ்ட் போதகராக 1907-ல் நியமிக்கப்பட்டார். ஆரம்ப நாட்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் சபையில் பிரசங்கித்தும் மற்ற நேரங்களில் ஹிந்தி மொழியை கற்கவும் செலவழித்தார்.

மூன்று வருடத்திற்குப் பிறகு சீதாபூர் என்ற இடத்திற்கு அவர் அனுப்பப்பட்டு ஏழை எளியோர் ஒதுக்கப்பட்ட மக்களின் நடுவில் வாழ்ந்து ஊழியம் செய்தார். அந்நாட்களில் இந்தியாவில் மிஷனெரிப்பணி பெரும்பான்மையாக ஏழ்மையான ஒதுக்கப்பட்ட மக்கள் மத்தியில்தான் நடந்தது. ஆனால் ஸ்டான்லி ஜோன்ஸ்க்கோ தங்களை உயர் ஜாதியினர் என அழைத்துக்கொள்வோர் மற்றும் அறிவியல் சிறந்தவர்கள் மத்தியில் பணிபுரிய வேண்டும் என பாரம் ஏற்பட்டது. படித்தவர்கள், உயர்ஜாதி மக்கள் மத்தியில் ஊழியம் செய்வது ஒரு சவாலாக அவருக்கு இருந்தது. தனது ஒன்பதாண்டுகால பணியில் சுவிசேஷத்திற்கு வாஞ்சைகாட்டும் சில முக்கிய அறிவாளிகளின் தொடர்பு அவருக்குக் கிடைத்தது. அதன்பின் தனது மிஷனெரி விடுப்பிற்காக தனது தேசம் சென்று திரும்பிய அவர் மனநோயால் கஷ்டப்பட்டார். அதன்பின் ஒரு ஆழமான ஆவிக்குரிய அனுபவத்தைப் பெற்று இனம்புரியாத தெய்வீக சமாதானத்தால் நிரப்பப்பட்டார். படித்த செல்வாக்குமிக்க மக்கள் மத்தியில் ஒரு சுவிசேஷகனாகப் பணிபுரிய ஆரம்பித்தார்.

இந்தியாவிலும், இந்திய எல்லைப் பகுதியில் உள்ள அண்டை தேசங்களுக்கும் சென்று கிறிஸ்துவைக் குறித்த செய்திகளைப்

பிரசிங்கித்தார். கிறிஸ்துவை மட்டுமே அவர் போதித்தார். கிறிஸ்தவம் மேற்கித்திய மதம் என்று வெறுத்து ஒதுக்கிய படித்த உயர்ஜாதி மக்களுக்கு மேற்கத்திய உலக மக்களின் இரட்சகராக இந்தியப் பண்பாட்டிலே தர பெரும் முயற்சி செய்தார் ஜோன்ஸ். தனது ஒவ்வொரு உரையாடலிலும் கிறிஸ்துவே ஆவிக்குரிய வாழ்விற்கு சிறந்த மாதிரி என்று கூறினார். கிறிஸ்தவ ஆசிரம முறையிலும் மேற்கத்திய பழக்கவழக்கங்களை துறந்து முழுமையாக இந்திய சமூக வாழ்க்கை முறையைப் பின்பற்றினார். ஜாதி, சமூக வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் சமமாக இருக்கவும் ஆசிரம வாழ்வு வழிவகுத்தது. 1940-ம் ஆண்டில் 24 கிறிஸ்தவ ஆசிரமங்களை இந்தியா முழுவதிலும் அவர் நிறுவினார். இந்திய உயர் சமுதாயத்திற்கு கிறிஸ்துவைத் தர ஸ்டேன்லி ஜோன்ஸ் ஒரு வித்தியாசமான அணுகுமுறை கொண்ட சுவிசேஷகனாகப் பணியாற்றியதால் ஒரு மதிப்பிற்குரிய தனி மனிதனாக இந்தியாவிலும், உலகம் முழுவதும் போற்றப்பட்டார். மகாத்மா காந்தி, நேரு போன்றவர்களின் நண்பனாகவும் இருந்தார். இந்தியாவில் 40 வருடங்கள் மிஷனெரியாகப் பணிபுரிந்தார்.

ஒருமுறை ஜப்பான் தேசத்திற்குச் சென்று கூட்டங்கள் நடத்தினபோது தேசத்தின் எல்லா பகுதரியிலிருந்தும் திரளான மக்கள் வந்து கலந்து கொண்டதோடு சுமார் பத்தாயிரம் பேர் தாங்கள் திறிஸ்துவிற்காக வாழத் தீர்மானித்தனர். 1938-ம் ஆண்டு சென்னையில் நடந்த உலகத் திருச்சபையின் மாநாட்டிலும் முக்கியப் பங்கு வகித்தார். கிறிஸ்துவின் பூரணத் தன்மையையம் சுவிசேஷத்தின் சிறப்பையும் எடுத்துக்கூறி இயேசு கிறிஸ்துவைப் பலருக்கு அறிமுகப்படுத்தி அவர்கள் தாங்களாகவே அவரை வேதவசனம் மூலம் முழுமையாக அறிந்துகொள்ள வழி ஏற்படுத்தினார். இந்தியப்பாதையில் கிறிஸ்து என்ற அவரது புத்தகம் பெருமளவில் எல்லாராலும் போற்றி வாசிக்கப்பட்டது. 1973-ல் அவரது மரணம் வரை ஒரு உத்தமமான கிறிஸ்தவ ஊழியக்காரனாக இருந்து தேவ பணி செய்து பல இந்திய மிஷனெரி ஸ்தாபனங்களுக்கு முன் மாதிரியான ஊழியப்பாதையைக் காண்பித்தார். இன்று நம் தலைமுறையில் வாழும் இந்திய தேசத்தின் படித்த அறிவாளிகளைக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திக்கும் பாரம் நம்மில் உண்டா? இந்திய பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் கறைபடாமல் நமது மக்களுக்கு ஏற்றபடி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நம்மிடம் உருப்படியான திட்டங்கள் உண்டா? என்பதை ஸ்டான்லி ஜோன்ஸின் ஊழியப்பாதை சிந்திக்க வைக்கிறது.

தொகுப்பு

சகோ. S.சுகுமார்

# வாலிபர் பகுதி

பரிசுத்த ஆவியின் வரங்களா! கனிகளா!! பரிசுத்த ஆவியின் வரங்கள் என்பது வேறு, ஆவியின் கனிகள் என்பது வேறு. I கொரி. 12–ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரை பற்றியும் அவர் தரும் வரங்களைக் குறித்தும் எழுதியுள்ளார். ஆனால் கலா. 5:22, 23 –ல் ஆவியின் கனியோ என இருப்பது மனிதனின் ஆவியை குறிக்கிறது. இது எப்படி! ஏன்! என்ற கேள்வி எழலாம் கலா.5:19–ம் வசனத்திலிருந்து வாசித்து பார்த்தால் மாம்சத்தின் கிரியைகளைக் குறித்து சொல்லிவிட்டு அதின் தொடர்ச்சியாக ஆவியின் (மனிதனின்) கனியை குறித்து எழுதியுள்ளார். எனவே இதிலிருந்து விசுவாசி என்று சொல்லுகிற ஒவ்வொருவரும் தன் மாமச் சுபாவங்களை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்து, பழைய மனுஷனை அடக்கம் செய்துவிட்டு புது மனிதனாக ஆவிககேற்றபடி பரிசுத்த ஆவியாலே நடத்த ஒப்பு கொடுத்து ஆவிக்குரிய வளர்ச்சி அடையும் போது கிறிஸ்து இயேசுவின் குணாதிசயங்களை தன்னில் வெளிபடுத்துகிறான். இதை தான் வேதம் நற்கிரியை என குறிப்பிடுகிறது. குணம் = கிரியை = கனி ஒரு விசுவாசியின் ஜென்ம சுபாவம் மறைந்து இயேசுவின் குணநலன்கள் வெளிப்படுகிறது தான் கனிகொடுப்பதாகும். இதை ஆண்டவர் ஒருநாளும் தரமாட்டார். நாம் தான் வளர்ந்து கனிக்கொடுக்கவேண்டும் உதாரணமாக... ஒரு தோட்டக்காரன் வாழைக் கன்றை தன் தோட்டத்தில் நடுகிறான். அந்த கன்றுக்கு தண்ணீர் பாய்ச்சி உரம்போட்டு களை பிடுங்கி அதை பராமரித்து வருவான். நட்டவுடனே எந்த மரமும் கனி கொடுக்காது. அது வளர ஆரம்பிக்கும். தனக்கு கிடைத்த ஆகாரத்தை வேர் மூலமாகப்பெற்று உயர்ந்து வளரும். குறிப்பிட்ட சிலகாலம் உயர உயர வளர்ந்து இலை கிளை விட்டு, நாள் வரும்போது பூ பூத்து காய் காய்த்து கனிதரும். எந்த மரம் வளர்க்கப்படுகிறதோ அந்த மரம் அதின் கனியைத்தரும். ஆண்டவர் வானத்திலிருந்து கனியை ஒட்ட வைத்து தொங்கவிடமாட்டார். அதே போல ஒரு விசுவாசி கிறிஸ்துவில் நாட்டப்பட்டு, வார்த்தை என்னும் விதையை இருதயம் என்னும் நிலத்தில் விதைத்து, பரிசுத்த ஆவி என்னும் தண்ணீரை குடித்து, விசுவாச போதனை என்ற உரத்தைப் பெற்று, துதி ஆராதனை என்ற வெளிச்சத்தில் நிலைத்து, வேதவசனம் என்ற மன்னாவைப் புசித்து, களைகளைக் களைந்து (பாவத்தை விட்டு) சபை என்னும் தோட்டத்தில் பராமரிக்க ஒப்புக்கொடுக்கும் போது ஆவிக்குரிய வளர்ச்சியடைந்து கனிகொடுக்கமுடியும். யோவா. 15:4,5 –ல் என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சை செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுகக் மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால்

ஒன்றும் செய்யக்கூடாது.மத். 3:8–ல் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் என்று வாசிக்கிறோம்

இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், நல்ல கனிகொடாதமரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (மத். 3:10). யோவா. 15:2 –ல் என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். எப்படி களைகளை பிடுங்கினவுடன் செடி நன்றாக வளர்கிறதோ அதே போல மாம்சத்தின் கிரியை மறைய, ஆவியின் கிரியை வளரும் இது வளர்ந்து வெளிப்படுவதுதான் கனி கொடுப்பதாகும். ஆவியின் வரங்களை அவரிடத்தில் பெறுகிறோம். ஏனென்றால் தேவனுடைய ஊழியத்தை செய்து அவருடைய ராஜ்ஜயத்தை கட்ட ஆனால் கனிகளை நநம்மிடத்தில் எதிர்பார்க்கிறார், நம்முடைய குணங்கள்தான் நம்முடைய கனி இதை கிரியையில் வெளிப்படுத்தவேண்டும். அதை வைத்துதான் நியாயத்தீர்ப்பு. நம்மில் கனி இல்லையென்றால் ஆக்கினைதீர்ப்பு! மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகிறார்கள் ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் தன் இரத்தத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் செலுத்தினால் இரத்தம் கொடுத்த மனிதனின் சுபாவம், இரத்தம் பெற்றவனுக்கு வந்துவிடும். சில ஆண்டுகளுக்கு முன்னால் விபத்துக்குள்ளான கோப சுபாவம்உள்ள தன் சகோதரனுக்கு இரத்தம் அதிகமாய் கொடுத்த அவருடைய சாந்த குணம் தன் சகோதரனுக்கு வந்து விட்டதை கண்டு உலகம் வியந்ததை செய்திதாள்களில் வாசித்திருப்பீர்கள். அதே போலத்தான் இயேசுவின் இரத்தத்தால் நாம் நம்மை கழுவ ஒப்புக்கொடுக்க கொடுக்க ஆவியானவர் நமக்குள் அசைவாட அசைவாட நாம் இயேசுவைப்போல மாறிவிடுவோம். சங். 62:12ல் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர். எரே. 17:10 –ல் கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன். மத். 16:27, ரோம. 2:16, வெளி. 2:23 –களில் மனுஷ குமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுகூட வருவார். அப்போது அவனவன் கிரியைக்குதக்கதாகப் பலனளிப்பார். வேதத்தை நேசியுங்கள், வாசியுங்கள், தியானியுங்கள். செயல்படுங்கள். மனந்திரும்புதலுக்கேற்ற கனிகொடுக்க இப்போதே ஒப்புக்கொடுங்கள். அப்படியானால் எழுப்புதல் நம் சபையின் மூலமாகத்தான். கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் கனிதரும்படி ஆசீர்வதிப்பாராக! ஆமென்

கர்த்தர் நம் ஒவ்வவொருவரையும் அபிரிவிதமாக ஆசீர்வதிப்பாராக

# 2016 - 2018 ஆம் ஆண்டிற்கான ஊழிய பொறுப்பாளர்கள்



Bro. Arun immauel
Constitution supervisor
66415504



Bro. Sivakumar
Auditor
97224276



Bro. Isaacdurai
Magazine
66015503



Bro. Christopher
Sunday school
99387644



Bro. Sugumar
Camp Ministry
66579514



Bro. Paul Pandiyaraj
Wed site
66594586



Bro. Johnson
Transport
97610275



Bro. Sam Anandh
Missioary
97666458



Bro. Arokiyadhass
Prayer
99870126



Bro. David Jaykumar
Choir
65033030



Bro. Mani raj
Orphange
60488900

# செயற்குழு உறுப்பினர்கள்

உங்களுக்கு
ஊழியம்
செய்ய
எங்களுக்காக
ஜெபியுங்கள்



ஒருமித்து
ஆண்டவர்
இயேசுவின்
நாமத்தை
உயர்த்துவோம்

**சபையின் ஊழியர்**
சகோ. ஸ்டாலின்
66021072



**செயலாளர்**
சகோ. ஜெகநாதன்
23917827 / 66889535



**பொருளாளர்**
சகோ. எபநேசர்
23922058 / 66857827



**வாலிபர் ஐக்கிய தலைவர்**
சகோ. ஆரோக்கிய ராஜ்
66159784

தங்களது ஜெப
விண்ணப்ங்கள்
எதுவாக
இருந்தாலும்
எங்களுக்கு
தெரிவிக்கவும்
உங்களுக்காக
ஜெபிக்க
ஒரு குழு
ஆயத்தமாயிருக்கிறது



**பெண்கள் ஐக்கிய தலைவி**
சகோதரி . தயா இயேசு ரெத்தினம்
23924262 / 94974732


*Church website Address*
*ahmaditamilcongregation.org*

*Church E.mail Address*
*ahmaditamil.kw@hotmail.com*



*private circulation*